செ.வெ. எண். **670** நாள்: 07.08.2010

**<u>மக்கள் நல்வாழ்வுத் துறை</u>**

## செய்தி வெளியீடு

எழும்பூர் குழந்தைகள் நல மருத்துவமனையில் இருதய அறுவை சிகிச்சை செய்வதற்கான கருவிகள் பழுதாகி உள்ளதாகவும் . அதனால் ஒரு மாதமாக இம்மருத்துவமனையில் குழந்தைகளுக்கு இருதய அறுவை சிகிச்சை செய்வதில்லை என்றும் சில நாளேடுகளில் செய்தி வெளியிடப்பட்டுள்ளது. இது முற்றிலும் தவறான செய்தியாகும்.

எழும்பூர் குழந்தைகள் நல மருத்துவமனையில் இருதய அறுவை சிகிச்சை செய்வதற்கு தேவையான எல்லா மருத்துவ உபகரணங்களும் நல்ல நிலையில் உள்ளன. எந்த மருத்துவ கருவியும் பழுதடையவில்லை. இம்மருத்துவமனையில் குழந்தைகளுக்கு தேவைப்படும் இருதய அறுவைச் சிகிச்சைகள், முதலமைச்சரின் இளங் குழந்தைகள் இருதய அறுவை சிகிச்சைத் திட்டத்தில் ஒதுக்கப்படும் ரூபாய் இருபத்தைந்து இலட்சம் நிதி மற்றும் மாநில நோயாளர் நல சுழல் நிதி ரூபாய் இருபத்தைந்து இலட்சத்திலும் செய்யப்படுகின்றன. இம்மருத்துவமனையில் கடந்த ஜீன் மற்றும் ஜுலை மாதங்களில் மட்டும் **15** குழந்தைகளுக்கு திறந்த இருதய அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டுள்ளன. இம் மருத்துவமனயில் குழந்தைகளுக்குத் தேவைப்படும் மூடிய இருதய அறுவை சிகிச்சைகள் எப்பொழுதும் போல் வழக்கமாக செய்யப்படுகிறது.

செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ள இரண்டு குழந்தைகளுக்கும் அறுவை சிகிச்சை செய்யப்படுவதற்கு முன் சில பரிசோதனைகள் செய்யப்பட வேண்டி உள்ளதால் தாமதமாகிறது. பரிசோதனையின் முடிவுகள் சரியாக இருந்து அவர்கள் உடல்நிலை மயக்க மருந்தினை ஏற்கும் நிலையில் இருந்தால் இந்த இரண்டு குழந்தைகளுக்கும் உடனடியாக இருதய அறுவை சிகிச்சை செய்யப்படும். இளஞ்சிறார் இருதய பாதுகாப்புத் திட்டம் மற்றும் கலைஞர் காப்பீட்டுத் திட்டம் ஆகிய இரண்டு திட்டங்களிலும் அங்கீகரிக்கப்பட்ட அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் குழந்தைகளுக்கு இருதய அறுவை சிகிச்சை இலவசமாக செய்யப்படுகிறது. எனினும் சில குழந்தைகளின் பெற்றோர்கள், எழும்பூர் அரசு குழந்தைகள் நல மருத்துவமனனயிலேயே தங்களுடைய குழந்தைகளுக்கு இருதய அறுவை சிகிச்சை செய்து கொள்ள வேண்டும் என்று விரும்பி இம்மருத்துவமனையில் சேர்க்கின்றனர். இந்த குழந்தைகளுக்கு எல்லா பரிசோதனைகளும் செய்து , அறுவை சிகிச்சைக்குப் பின் இவர்களுக்கு தொற்று ஏற்படாமல் இருப்பதற்கு தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் செய்ய வேண்டியிருப்பதால் சில நேரங்களில் இருதய அறுவை சிகிச்சை செய்ய ஒரு மாத காலம் ஆகிறது. இந்த மருத்துவமனையில் நிதிப் பற்றாக்குறை ஏதுமில்லை. எல்லா அரசு மருத்துவமனைகளுக்குமே தமிழக அரசு போதிய அளவு நிதியை ஒதுக்கியுள்ளது. எனவே குழந்தைகள் நல மருத்துவமனயில் இருதய அறுசை சிகிச்சை

செய்வதற்கான கருவிகள் பழுதடைந்துள்ளது என்றும் , சில கருவிகள் இல்லை என்றும் குறிப்பிடப்பட்டு இருப்பதும் தவறான செய்தியாகும்.

வி.கு. சுப்புராஜ்
அரசு முதன்மைச் செயலாளர்

******

**வெளியீடு: இயக்குநர், செய்தி—மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை—9.**